# இலங்கைச் சனநாயக சோசலிசக குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2026 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க,
## நீதித்துறை (திருத்தச்) சட்டம்

---

**[2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]**

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2026, செத்தெம்பர் மாதம் 25 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

இச்சட்டத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## 2026 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம்

[2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.-ஒ. 25/2026

### 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவானது, அதன் (அ) என்னும் பந்தியின் “நூற்றிப்பத்திற்கு மேற்படாதவர்களுமான” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “நூற்றியிருபதிற்கு மேற்படாதவர்களுமான” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சட்டத்தின் 4 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவினைத் திருத்துதல்

(1) அதன் (3) ஆம் உட்பிரிவில் “அறுபத்தொன்றாக விருத்தல் வேண்டும்.” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “அறுபத்துமூன்றாகவிருத்தல் வேண்டும்.”; அத்துடன்

(2) அதன் 4 ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் -

> “(4) (355 ஆம் அத்தியாயமான) பகிரங்க அலுவலர்களும் நீதித்துறை அலுவலர்களும் (ஓய்வுபெறுதல்) கட்டளைச்சட்டத்தில் முரணாக எதுஎவ்வாறிருப்பினும், மற்றெல்லா நீதிபதிகளும் நீதிவான்களும் ஓய்வுபெறும் வயது அறுபத்தியிரண்டாகவிருத்தல் வேண்டும்.”.

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

PL 15911- 538 (2026/08)

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம் இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக் கொள்ள முடியும்